**செய்தி வெளியீடு எண்: 382** **நாள்: 24.05.2008**

வேளாண்மைத் துறையில் 2007–2008ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் செயல்பாடு மற்றும் 2008–2009ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (24.5.2008) மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் தலைமை செயலகத்தில் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் விதை மற்றும் உரம் தேவை குறித்தும், காய்கறிகள் மற்றும் பழ மரச் செடிகள் விநியோகம் குறித்தும், சர்க்கரைத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, விதைச்சான்றுத் துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராச்சிகள் குறித்தும் விரிவாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சுர்ஜித் கே. சௌத்திரி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக துணை வேந்தர் டாக்டர் சி. ராமசாமி, வேளாண்மை ஆணையர் திரு எஸ். கோசல்ராம், இ.ஆ.ப., சர்க்கரைத்துறை இணை ஆணையர் திரு ராமமூர்த்தி, இ.ஆ.ப., சிறப்பு செயலாளர் திரு தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., வேளாண் விற்பனைத்துறை இயக்குநர் திரு அதுல் ஆனந்த், இ.ஆ.ப., வேளாண்மைப் பொறியியல் துறை தலைமைப் பொறியாளர் திரு சி.த. சபாரத்திரனம், விதை சான்றுத் துறை இயக்குநர் திரு பெருமாள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை இயக்குநர் டாக்டர் சந்திரசேகரன், கூடுதல் செயலாளர் திரு பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை .**